**உடுதும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 16 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 14 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடுதும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 06 வாகனங்களின் பெறுமதியினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) நன்கொடையாகக் கிடைத்திருந்த டொஷிபா வீவர் (Toshiba Viewer) நிழற் பிரதி இயந்திரத்தின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைத்திருந்த ரூபா 11,427 இற்கான கழிவுத் தொகையை வருமானம் ஒன்றெென கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ஆண்டிற்கான கடன் தவணைப் பணமாகிய ரூபா 187,926 இனை நடைமுறை பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சம்பள மீளளிப்புக்கள் என பெற வேண்டிய ரூபா 2,706,611 இற்கான பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 24,756,156 இற்கான நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மீதியை நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, நிதி நிலைமை கூற்றில் மொத்தச் சொத்துக்கள் மற்றும் மொத்தப் பொறுப்புக்கள் (உரிமைகள் உட்பட) அதே தொகையால் வேறுபட்டிருந்தது. அதே போல், நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீது நடைமுறை சொத்துக்களுடன் உட்படுத்தினால் ரூபா 2,000 பெறுமதியினால் நிதி நிலைமைக் கூற்றின் மொத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மேலும் இணக்கமின்மை ஏற்படும் என அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 29,093,520 இற்கான பெறவேண்டிய கணக்கு மீதிகள் 14 இன் பெறுமதியான ரூபா 3,411,747 தொகை 01 வருட காலத்தை மிகைத்திருந்தது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 26,613,026 இற்கான 05 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,206,700 தொகை 01 வருட காலத்தை மிகைத்திருந்ததுடன் அம் மீதியில் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர்களின் பெறுமதி ரூபா 762,816 ஆகும்.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) | நி.பி. 396(இ) | 2013 நவம்பர் 25 திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப் பட்டிருக்காத இலக்கம் 87531 கொண்ட ரூபா 26,115 தொகை பெறுமதியான காசோலை தொடர்பாக கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூன் 30 திகதி வரை குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 571(2) | 5 விடயங்கள் தொடர்பான ரூபா 402,958 இற்கான 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,380,427 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,230,230 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,610,657 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரின் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2014.01.01 திகதி யில் உள்ளவாறு நிலுவை | ஆண்டின் போது சிட்டை இடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் - 2014.01.01 திகதி உள்ளவாறு நிலுவையில் சேகரித்த வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் - 2014 ஆண்டின் போது சிட்டை யிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியில் அறவிடப் படாத தொகை | 2014 சிட்டை இடப்பட்ட வருமானத் தில் அறவிடப் படாத தொகை | அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி | 149,736 | 73,117 | 39,223 | 42,130 | 110,513 | 30,987 | 141,500 |
| ஏக்கர் வரி | 178,643 | 11,906 | 580 | 654 | 178,063 | 11,252 | 189,315 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | -- | 596,050 | -- | 596,050 | -- | -- | -- |
| கடை வாடகை | 498,630 | 549,700 | 204,030 | 426,615 | 294,600 | 123,085 | 417,685 |
| சந்தை வாடகை | 3,104 | 158,035 | -- | 158,035 | 3,104 | -- | 3,104 |
| நீர்க் கட்டணம் | 1,034,622 | 683,505 | 487,096 | 200,962 | 547,526 | 482,543 | 1,030,069 |
| நீதி மன்றத் தண்டப் பணம் | 656,462 | 343,129 | 56,462 | 182,797 | -- | 160,332 | 160,332 |
| முத்திரைக் கட்டணம் | 1,649,066 | 1,893,050 | 1,649,066 | 113,030 | -- | 1,780,020 | 1,780,020 |
| ஏனையவை | 142,300 | 1,158,558 | 17,500 | 720,366 | 124,800 | 438,192 | 562,992 |

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4,282,413 இற்கான நிலுவை வருமான மீதி ஒன்று காணப்பட்டது.

2.2.2 வீத வரி

-------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 149,736 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டவை ரூபா 73,117 ஆகும். ஆண்டின் போது அறவீடு செய்தல் சதவீதம் நிலுவையில் நூற்றிற்கு 26 உம் மற்றும் சிட்டையிடப்பட்ட நூற்றிற்கு 58 ஆக காணப்பட்ட காரணத்தினால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 141,500 இற்கான மீதியொன்று காணப்பட்டது. மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158(1) மற்றும் 159(1) இன் ஏற்பாடுகளை கடைபிடித்து, 2014 ஏப்ரல் 30 திகதி வரை நிலுவை வருமானத்தினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீர்க் கட்டணம்

------------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 1,034,622 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது நிலுவை மீதியில் இருந்து அறவீடு செய்தல் 47 ஆகக் காணப்பட்டமையால் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,027,465 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அத் தொகையில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 547,526 ஆகக் காணப்பட்டது.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 160,332 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,780,020 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

(அ) கிராமிய நீர் வழங்கள் மற்றும் தேகாரோக்கிய அலகின் மூலம் வழங்கியிருந்த CP–JW-5891 மற்றும் CP–JW-6859 கொண்ட 02 மோட்டார் சைக்கிள்கள் 2015 ஜூலை 24 திகதி வரை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கராஜ் ஒன்று சபையில் காணப்படவில்லை. அத்துடன், சபை அலுவலக வளவில் மற்றும் சபையின் கருத்தரங்கு மண்டபம் வளவில் பல்வேறு காலநிலை தாக்கங்களுக்கு ஆளாகி, பாதுகாப்பற்ற நிலையில் சபையின் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

(இ) சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகள் 15 உம் சனசமூக நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் 49 உம் சத்திரங்கள் அமைந்துள்ள 12 காணிகளும் மயானங்கள் அமைந்துள்ள 34 காணிகள் என்பவற்றின் காணி உறுதிகள் மற்றும் சாட்டுதல் கட்டளைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் CP–LH-4778 கொண்ட டிபர் வண்டி மினிப்பே பிரதேச சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு வாடகை அடிப்படையில் கொடுத்தல் தொடர்பாக மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 35,000 இனை கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூன் 24 திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2004 மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளின் போது சபையின் டிரக்டர் மற்றும் பவுஸர் வண்டிகளை வாடகை அடிப்படையில் 03 அரச நிறுவனங்களுக்கு கொடுத்தமை தொடர்பாக ரூபா 32,200 இற்கான வாடகை ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) பெறுமதி கூட்டிய வரிக்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றல்லாத சபையினால் மீளாய்வாண்டின் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்யும் போது அறவீடு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 11,700 இற்கான பெறுமதி கூட்டிய வரித் தொகை கணக்கு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் 09 வாகனங்கள் 01 வருட காலத்தை விட மிகையான காலம் முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் பயன்படுத்தப்படாமலும் மற்றும் குறை பயன்பாட்டுடனும் நிறுத்தப்பட்டு காணப்பட்டது.

(ஆ) ரூபா 4,542,575 தொகை பெறுமதியான 07 வாகனங்கள் மற்றும் பெறுமியினை இனங்காணாத வாகனம் ஒன்று ஒரு வருடத்தை விட மிகையான காலம் பயன்படுத்தப்படாமல் மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(இ) 2014 ஆண்டின் போது மத்திய மாகாண சபை, உள்ளுராட்சித் திணைக்களத்தினால் வழங்கியிருந்த ரூபா 281,980 பெறுமதியான 04 அலுவலக உபகரண விடயங்கள் தொடர்பான 27 அலகுகள் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜுலை 24 திகதி வரை பயன்படுத்தியிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பு மற்றும் நள்ளாளுமை

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டின் போது சபையினால் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

### 4.2 பெறுகைகள் திட்டம்

சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 11,826,925 இற்கான மூலதனச் செலவுகள் மேற்கொண்டிருந்த போதிலும் அதற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

### 4.3 தொழிற்பாட்டுத் திட்டம்

சபையினால் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டுத் திட்டமொன்று தயாரித்திருக்காமையால், காலாண்டு முன்னேற்ற மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கைகளும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

சபையினால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்கள் நியமனம் செய்வதற்கு மற்றும் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.5 அகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது சபையினால் அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 04 வருமான விடயங்களில் நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 62 வரையும், 06 செலவு விடயங்களில் நூற்றிற்கு 18 முதல் நூற்றிற்கு 96 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்